**இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் கொடுக்கல் வாங்கல் தொர்டர்பான அறிக்கை – 2020/2021**

---

இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் 2020 மற்றும் 2021 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு அலுவல்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதுகின்ற, எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

அந்த சட்டத்தின் 16(2) ஆம் உப பிரிவின் பிரகாரம், அனைத்து கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனம் தொடர்பாக வருடாந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையுடன் விதிகளின் மூலம் காட்டக் கூடியவாறான காலப் பகுதியினுள் அந்த நிறுவனங்களின் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அந்த சட்டத்தின் 38(1)(ஈ) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த அறிக்கைகள் மற்றும் ஏனைய நிதிக் கூற்றுக்கள் உரிய நேரித்தினுள் தயாரிக்கப்படுகின்றது என உறுதிப்படுத்த வேண்டியதுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்கு உரிய வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஜூன் 02 திகதிய இலக்கம் பீஈடி/12 கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் உப பிரிவு 6.5.1 இற்கு இணங்க நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் குறைபாடுகளுடன் 2022 நவம்பர் 24 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2019, 2020 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்கள் 2022 ஒக்ரோபர் 31 திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். தற்போது 2018 ஆண்டிற்குரிய முழுமை பெறாதவை என குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைகள் உங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டன. 2018 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் இறுதிக் கணக்காய்வு அறிக்கையின் படி 2019 நிதிக்கூற்றுக்கள் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு மாத்திரம் உள்ளது. 2020 மற்றும் 2021 ஆண்டுகளுக்குரிய நிதிக் கூற்றுக்கள் கூடிய விரைவில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.4.1. பெற வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2003 ஒக்தோபர் 07 திகதிய CFC/GM/CIR/51 இலக்கங் கொண்ட கூட்டுத்தாபனத்தின் உள்ளக சுற்றறிக்கையின் மூலம் கடன் விற்பனவு உடனடியாக இடைநிறுத்துமாறு அறிவுரை வழங்கப்பட்டிருந்த போதிலும் 2021.12.31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய மொத்த மீன் விற்பனை பெறுமதி ரூபா 261,549,254 தொகையாக காணப்பட்டதுடன், இவற்றில் 5 வருடங்களுக்கு மிகையான வெளி கடன்பட்டோர் மீதி ரூபா 28,831,013 தொகையும் ஊழியர்களுக்கு மீன் விற்பனவில் தீர்க்கப்படாத கடன்பட்டோர் மீதி மற்றும் வைத்தியசாலை கடன்பட்டோர் மீதி ரூபா 17,497,325 தொகையும் காணப்பட்டது. எவ்வாறாயினும் சுற்றறிக்கைக்கு முரணாக கடனிற்காக மீன் விற்பனை செய்த உத்தியோத்தருக்கு எதிராக இது வரை நடவடிக்கைகள் ஏதும் எடுத்திருக்கவில்லை. | நிறுவனத்தின் விற்பனவு அதிகரிப்பதற்காக வெளித் தரப்பினருக்கு கடன் அடிப்படையின் மீது விற்பனை மேற்கொள்ளப்பட்டதுடன் நிறுவனத்தில் இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு உள்ளக உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் உள்ளக சுற்றறிக்கையை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. | உள்ளக சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன் அதனை கடைபிடிக்காத உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வைத்தியசாலைகள் கடன்பட்டோருக்கான மீதிகளின் உறுதிப்படுத்தல் அழைக்கப்பட்ட போது 30 வைத்தியசாலைகளில் 16 இல் இருந்து மாத்திரம் உறுதிப்படுத்தல் கிடைத்திருந்ததுடன், அந்த கிடைத்திருந்த மீதியிடையே ரூபா 7,782,214 இற்கான மீதிகள் உறுதிப்படுத்தல்களுடன் இணங்காமை தொடர்பாக பின் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் அளிக்கப்படவில்லை. | இணங்கியிருக்காத மீதிகள் உறுதிப்படுத்தல்களுக்கான காரணங்களை கண்டறிவதற்கு விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.4.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஒக்தோபர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய திறைசேரி பிணை முறிகள் மீது வங்கிக் கடன் மீதி ரூபா 158,623,208 தொகையாகக் காணப்பட்டதுடன் அத் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய வட்டித் தொகை ரூபா 34,531,894 தொகை மற்றும் 1257 ஆம் இலக்க வங்கிக் கணக்கில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வங்கிக் கூற்றின் படி வங்கி மேலதிகப் பற்று ரூபா 25,491,592 தொகையாக காணப்பட்டதுடன் கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக நட்டமடைவதினால் இந்த சீரற்ற நிதிநிலைமையை முகாமைத்துவம் செய்வதற்கு முடியாமல் இருந்தது. | குறிப்பிட்ட திறைசேரி பிணைமுறியின் மீது பெற்றுக் கொண்டிருந்த வங்கிக் கடனை செலுத்துவதற்காக இலங்கை வங்கி மற்றும் திறைசேரியுடன் உயர் முகாமைத்துவத்தினால் கலந்துரையாடியிருந்ததுடன், உரிய செய்முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | கூட்டுத்தாபனத்தின் எதிர்கால நிலைத் திருத்தல் தொடர்பாக ஆபத்து நிலைமை காணப்படுவதனால் முகாமைத்துவம் இது தொடர்பாக கடுமையாக கவனம் செலுத்தப்பட வேண்டும். |

### 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நி.பி.103(இ) | காணாமல் போதல், சேதமடைதல் தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்டு பொறுப்பு சொல்ல வேண்டியவர்களை தீர்மானிக்க வேண்டியிருந்த போதிலும் காலி ஐஸ் இயந்திர அறையில் இருப்புக்களின் பௌதீக பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட அமுக்கி இயந்திரத்தின் உதிரிப் பாகங்கள் காணாமல் போதல் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களை தீர்மானித்தல் இது வரை மேற்கொண்டிருக்காததுட | இது தொடர்பாக தாபன மட்டத்தில் முறையான மற்றும் நிதி விசாரணை ஒன்று மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் காணாமல் போன உதிரிப் பாகங்களின் தற்போதைய சந்தைப் பெறுமதியின் மதிப்பீட்டு பெறுமதி பெற்றிருந்ததுடன் இந்த காணாமல் போதல் தொடர்பாக காலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளதுடன், அதற்குரிய விசாரணை ஒன்று தற்போது நடாத்தப்பட்டு வருகின்றது. | இந்த நட்டத்திற்கு பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களை தீர்மானிப்பதற்காக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ன் இந்த அமுக்கி இயந்திரங்களின் பெறுமதியும் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | | |
| (ii) | நி.பி.175(2) | நிலுவைத் தொகை தொடர்பாக விசேட கவனம் செலுத்தி, தேவைப்படின் தாமதமின்றி சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஆரம்பிக்கப்பட வேண்டி இருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த மீன் விற்பனையின் நிலுவைத் தொகையாகிய ரூபா 261,549,254 தொகையில் 01 வருடத்திற்கு குறைவான ரூபா 129,435,004 தொகையும் 1-3 வருடங்களுக்கு இடைப்பட்ட மீதி ரூபா 42,460,993 தொகை, 3-5 வருடங்களுக்கு இடைப்பட்ட மீதி ரூபா 20,743,759 தொகை மற்றும் 5 வருடங்களுக்கு மிகையான மீதி ரூபா 68,909,498 தொகை காணப்பட்ட போதிலும் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உற்பத்தி, விற்பனை, விற்பனை மேம்பாடு மற்றும் செயற்திட்டப் பிரிவிற்குரிய நிலுவை கடன் தொடர்பாக உரிய நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன், தொடர் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேலும் சலுகை விற்பனை நிலையங்கள் தொடர்பான கடன் மீதி தொடர்பாக உரிய தரப்பினருக்கு உள்ளக விசாரணை அலுவல்கள் மேற்கொண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் நிதிக்குற்றப் பிரிவில் முறைப்பாடு ஒன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிலுவைத் தொகையை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி கூட்டிய வரிச் சட்டத்தின் பிரிவு 26 | பெறுமதி கூட்டிய வரித் தொகை அனைத்து மாதங்களிலும் 20 திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 19,696,372 இற்கான தொகையொன்று அனுப்பப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நிதி நிலைமை சீரடைந்த பின்னர் குறிப்பிட்ட கொடுப்பனவுகளை மிக விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | இந்த வரித் தொகை உடனடியாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்பும் வரிச் சட்டத்தின் பிரிவு 04 | தேசத்தை கட்டியெழுப்பும் வரித் தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 94,316,489 இற்கான தொகையொன்று தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | ரூபா 94,316,484.00 பெறுமதியில் 2022 ஆண்டின் போது ரூபா 10,350,626.65 இற்கான பெறுமதிக்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் கூட்டுத் தாபனத்திற்கு எதிராக கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதன் படி 2022.12.12 திகதி கௌரவ நீதிமன்றத்தில் வழக்கு அழைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் கூட்டுத்தாபனம் தற்போது கடும் நிதி நெருக்கடியுடன் காணப்படுகின்றது என கௌரவ நீதிமன்றத்தின் விடயங்களை அறிவித்த பின்னர் குறிப்பிட்ட நிலுவைத் தொகையை மாதம் ரூபா 500,000 வீதம் தவணைகளாக செலுத்தி முடிப்பதற்காக கட்டளையிடப்பட்டிருந்தது. அதன் படி முதலாவது தவணை ஆகிய ரூபா 500,000 தொகை 2023.01.25 திகதி கௌரவ நீதிமன்றத்தில் கொடுப்பனவு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், மீதித் தொகை அடுத்த தவணைகளில் செலுத்தி முடிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும், ஏனைய நிலுவை வரித் தொகைகள் நிதி நிலைமை சீரடைந்ததுடன் செலுத்தி முடிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | தேசத்தை கட்டியெழுப்பும் வரி தாமதமின்றி உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டும். |
| (ஈ) | 2015 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டண வரிச் சட்டம் மற்றும் 2017 இன் | 2015 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை செலுத்த வேண்டிய பொருளாதார சேவை வரித் தொகை | பதில் அனுப்பியிருக்கவில்லை. | பொருளாதார சேவை வரித் தொகை தாமதம் இன்றி உள்நாட்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| | 07 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணம் (திருத்திய) சட்டம் | ரூபா 49,119,889 தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி இருக்கவில்லை. | | இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டும். |
| (உ) | 2013 செப்தெம்பர 11 திகதிய 2013/2 இலக்கங் கொண்ட அரசதொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பந்தி 3.7 மற்றும் 3.9 | சுற்றறிக்கையின் மூலம் நிலுவை ஊழியர் சேமலாப பங்களிப்புத் தொகை மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய பங்களிப்புத் தொகையை தீர்ப்பதற்காக கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் அறிமுகப்படுத்தியிருந்ததுடன் சுற்றறிக்கையின் 3.7 இன் படி மேலும் நிலுவை பங்களிப்புத் தொகை தொடர்பாக உரிய அமைச்சுச் செயலாளருக்கு அறிவித்து திறைசேரி செயலாளருக்கு பிரதியொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் திறைசேரி செயலாளருடன் கலந்துரையாடி தீர்வொன்றினை அணுகுதல் அமைச்சுச் செயலாளரின் பொறுப்பொன்றாக இருந்தது. அதே போல் சுற்றறிக்கையின் 3.9 பிரிவின் படி தொடர்ந்தும் நிலுவை பங்களிப்புத் தொகை அதிகரிக்காமல் இருப்பதற்காக தலைவர், பணிப்பாளர் சபை, பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்கள் மற்றும் விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் கூட்டாக மற்றும் தனித்தனியாக கடப்பாடு இருப்பதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. அவ்வாறாயினும் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு | நிலுவை பங்களிப்புத் தொகையை செலுத்துவதற்காக வரிசை அமைச்சின் தலையீட்டின் கீழ் அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று ஊடாக திறைசேரியினால் ஏற்பாடு ஒன்று விண்ணப்பிப்பதற்கும் அவ்வாறு மேற்கொள்வதில் கடினம் ஏதும் காணப்படின் தற்போதைய ஏற்பாட்டு அலுவல்கள் மீது நிறுவனம் ஏதும் ஆக்கபூர்வமான இலாபம் ஒன்று காட்டுவதன் மூலம் மாதாந்தம் செலுத்தக் கூடிய தவணைத் தொகையை தீர்மானித்து அதன் படி நீண்டகால திறைசேரியின் பிணையின் மீது வங்கிக் கடனொன்று பெற்றுக் கொண்டு இந்த பங்களிப்புத் தொகையை செலுத்தி முடிப்பதற்கு முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. | ஊழியர் சேமலாப நிதித் தொகை மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் உரிய முறையில் குறிப்பிட்ட காலத்தில் அனுப்பப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தீர்க்கப்படாமல் காணப்பட்ட ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புத் தொகை ரூபா 321,171,209 தொகையும் மிகைவிதிப்பாக ரூபா 165,835,868 தொகையும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பு என ரூபா 15,420,275 தொகையும் மிகை விதிப்பாக ரூபா 7,710,137 தொகையும் காணப்பட்டது. | | |
| (ஊ) | 2003 ஜுன் 02 திகதிய PED/12 இலக்கங் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பந்தி 5.1.3 | பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் நாளதுவரை ஆக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரதி ஒன்று அடுத்த நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் கூட்டுத்தாபனத்தினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2021-2025 வரையான காலப் பகுதிக்குரிய கூட்டிணைந்த திட்டம் 2022 ஜுலை 13 திகதி அதாவது ஒன்றறை வருடங்களுக்கு பின்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கோப் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு தற்போது தயாரிக்கப்பட்டுள்ள ஐந்து வருட கூட்டிணைந்த திட்டத்தில் திருத்தம் மேற்கொண்டு புதிய கூட்டிணைந்த திட்டம் ஒன்று மிக விரைவில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கின்றேன். அந்த கூட்டிணைந்த நீடிப்பொன்றாக 2023 ஆண்டிற்குரிய உபாய முறை திட்டம் அடங்கிய பொழிப்பு நிறுவனத் திட்டம் தயாரிக்கப்பட்டு குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் நாளதுவரை ஆக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரதி ஒன்று தொடர்ந்து வரும் ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் கூட்டுத்தாபனத்தினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும். |

**2. செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 முகாமைத்துவத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீன்பிடிக் கூட்டுத் தாபனத்திற்கு சொந்தமான ரூபா 1,273,400,000 தொகை பெறுமதியான 46 ஏக்கர் 01 ரூட் 10 பர்சஸ் காணியினை 2021 திசெம்பர் 31 திகதி வரை கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதில் அளித்திருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணிகளை கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (ஆ) | நீர்கொழும்பு, திருகோணமலை, பேருவளை, மிரிஸ்ஸ, புரானவெல்ல, குடாவெல்ல, தங்கல்ல, பேலியகொட, மாத்தறை, பெலிஅத்த, வீரகெடிய, அம்பலாங்கொட, அங்குனுகொலபெலஸ்ஸ ஆகிய பிரதேசங்களில் கூட்டுத்தாபனத்தினால் பயன்படுத்தப்படுகின்ற 15 காணிகள் தொடர்பாக அந்த காணிகளின் அளவு, பெறுமதி, உரிமை, உரித்தாக்கல் மற்றும் பெறுமதி மதிப்பீடு ஆகிய தகவல்கள் ஏதும் கூட்டுத்தாபனத்திடம் காணப்படவில்லை. | பதில் அளித்திருக்கவில்லை. | காணி தொடர்பாக அனைத்து தகவல்களும் கூட்டுத்தாபனத்தினால் பேணப்பட வேண்டும். |

**2.2 செயற்பாட்டுத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஜுலை 22 காலி ஐஸ் இயந்திர அறை வாடகைக்கு கொடுப்பதற்காக நிறைவேற்று, தனியார் நிறுவனம் ஒன்றுடன் அணுகிய உடன்படிக்கையின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் அனுபவிப்பின் கீழ் காணப்படும் அமுக்கி இயந்திரத்தின் பராமரிப்பு மற்றும் திருத்த வேலை தொடர்பாக பிரிவுகள் ஏதும் அடங்கியிருக்காததுடன் கூட்டுத்தாபனத்தின் பூர்வாங்க அங்கீகாரமின்றி வாடகைக்கு பெற்ற தரப்பினரினால் 02 அமுக்கி இயந்திரங்கள் திருத்த வேலைக்காக வேறு தனியார் கம்பனி ஒன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 7.1 மில்லியனுக்கான (அ.டொ. 10,000) சந்தை பெறுமதி ஒன்று காணப்படும் அமுக்கி இயந்திரங்கள் 2022 நவம்பர் 30 திகதி அளவிலும் செயலிழந்த நிலைமையில் காணப்பட்டது. | பதில் வழங்கியிருக்கவில்லை. | அமுக்கி இயந்திரங்களை திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | கூட்டுத்தாபனத்தினால் வைத்தியசாலைகளுக்கு மீன் மற்றும் கருவாடு வழங்கப்படுவது வைத்தியசாலைகளினால் வேண்டப்படும் மீன்கள்/ கருவாடு வகை மற்றும் எண்ணிக்கை அடிப்படையிலாக இருக்க வேண்டிய போதிலும் 2020 ஆண்டு 04 மாதங்கள் மற்றும் 2021 ஆண்டில் 08 மாதங்களுக்குரிய நாளாந்த திருப்பி அனுப்பும் ஏடு (Return Day Book) இனை பரிசோதனை செய்த போது 10 | கொவிட் நெருக்கடி நிலைமையின் கீழ் நிறுவனத்தின் ஊழியர்களின் வரவு வரையறுக்கப்பட்டதுடன் பிரிவின் நாளாந்த செயற்பாட்டு அலுவல்கள் மிகவும் சிரமத்துடன் நடாத்திச் செல்லப்பட்டது. அதன் காரணமாக வைத்தியசாலை வழங்கள் அலுவல்கள் தாமதம் அடைந்தமையால் வைத்தியசாலைகளினால் | மீன்கள்/ கருவாடு திருப்பி அனுப்பப்படாமல் இருப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக இருக்க வேண்டியதுடன், வைத்தியசாலை தேவைப்பாட்டிற்காக |

| | | | |
|---|---|---|---|
| | வைத்தியசாலைகளில் இருந்து ரூபா 573,653 தொகை பெறுமதியான மீன்கள்/ கருவாடு 676.3 கிலோ திருப்பி அனுப்பப்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக கண்டறிவதற்கு கூட்டுத்தாபனத்தின் வைத்தியசாலை வழங்கல் பிரிவினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் அரச சேவை வழங்கல் பிரிவின் மூலம் சலுவை விலையில் மீன்கள் மற்றும் கருவாடு மொத்தமாக வழங்கப்படுவது வைத்தியசாலைகளின் தேவைக்காக மாத்திரமே. அவ்வாறிருந்த போதிலும் அந்த சலுகை விலைக்கு வைத்தியசாலை பதவியணியினருக்கு மீன் வழங்கப்பட்டு இருந்த 11 சந்தர்ப்பங்களில் ரூபா 282,318 தொகை பெறுமதியான 315 கிலோ மீன்கள்/ கருவாடு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.<br>வைத்தியசாலைகளுக்கு சலுகை விலையில் வழங்கப்படும் மீன் போக்குவரத்துக்கான கிரயமும் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வழங்கப்பட்டிருந்ததுடன், கூட்டுத்தாபனம் தொடர்ந்தும் நட்டமடையும் காரணத்திற்கு இவ் விடயமும் தாக்கத்தை ஏற்படுத்தி இருந்ததென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | மீன்கள் மற்றும் கருவாடு ஏற்றுக் கொள்ளாமல் திருப்பி அனுப்பப்பட்டிருந்ததுடன் அவற்றை மீண்டும் வைத்தியசாலை கட்டளைகளுக்காகவே வழங்கப்பட்டது.<br><br>கொவிட் தொற்றுநோய் காரணமாக வைத்தியசாலை பதவியணியினருக்கு உணவுப் பண்டங்கள் சந்தையில் பெற்றுக் கொள்வது சிரமங்கள் காணப்படுவதாக குறிப்பிட்டு விண்ணப்பித்ததனால் இரக்க சிந்தையுடன் வைத்தியசாலை பதவியணியினருக்கு மிகவும் குறைந்த எண்ணிக்கையான மீன்கள்/ கடுவாடு வைத்தியசாலை சலுகை விலைக்கே வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு வழங்கப்பட்ட மீன்கள்/ கருவாடு திருப்பி அனுப்பப்படவில்லை. அந்த வைத்தியசாலை பதவியணியினருக்கு மீன்கள்/ கருவாடு அந்த வைத்தியசாலைகளின் கட்டளைகளுடனேயே வழங்கள் மேற்கொள்ளப்பட்டமையால் மீன் போக்குவரத்துக்காக மேலதிக கிரயமொன்று மேற்கொள்ள நேரிட்டிருக்காததுடன் நிறுவனம் நட்டமடைதலுக்கு அவ்விடயம் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. | மாத்திரம் மீன்கள்/ கருவாடு வழங்கப்பட வேண்டும். |
| (இ) | 2018, 2019 மற்றும் 2020 ஆண்டுகளின் போது ரூபா 2,093,548 இற்கான ஆரம்ப செலவு மேற்கொள்ளப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 8 வர்த்தக நிலையங்கள் 2020 ஆண்டு மூடப்பட்டிருந்ததுடன், இவற்றில் 2020 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 3 வர்த்தக நிலையங்களும் காணப்பட்டது. 2021 ஆண்டில் ரூபா 1,461,658 இற்கான ஆரம்ப கிரயம் மேற்கொள்ளப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த இதனுள் 2020 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 04 வர்த்தக நிலையங்களும் 2021 ஆண்டில் | புதிய வர்த்தக நிலையம் ஒன்று ஆரம்பிப்பதற்கு பொருத்தமான இடமொன்று தெரிவு செய்யும் போது பொது மக்கள் கூடுதலாக நடமாடும் பிரதான நகரங்களை மையமாக கொள்ளல் தற்போது கூட்டுத்தாபனத்தினால் கடைபிடிக்கப்படும் வழமையான செய்முறை ஆகும். அதன்படி பல சந்தர்ப்பங்களில் எதிர்பார்த்த விற்பனை நெருங்க முடியுமாக இருந்த போதிலும் | புதிய வியாபார நிலையம் ஒன்று ஆரம்பிப்பதற்காக தகுதியான இடமொன்று தெரிவு செய்யும் போது சந்தை ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆரம்பிக்கப்பட்ட ஒரு வர்த்தக நிலையமும் காணப்பட்டது. வர்த்தக நிலையம் ஒன்று ஆரம்பிப்பதற்கு முன்னர் குறிப்பிட்ட பிரதேசத்தில் போதியளவு விற்பனை ஒன்று மேற்கொள்ள முடியுமா என சந்தை கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளாமையால் இந்த வர்த்தக நிலையங்கள் மூடுவதற்கு நேரிடுகின்றது எனவும் இவ்வாறு மூடப்படுவதனால் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் விளைவற்றதாவதன் காரணத்தினால் கூட்டுத்தாபனம் தொடர்ந்தும் நட்டமடையும் நிலைமையை அடைகின்றது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | சில சந்தர்ப்பங்களில் நிலவுகின்ற போட்டி சந்தையில் வியாபார நிலையத்தில் எதிர்பார்க்கப்பட்ட விற்பனவினை பெற்றுக் கொள்ள முடியாமல் இருந்தது.<br>அதற்காக வெளி வியாபார நிலையங்களில் காணப்படும் போட்டி தன்மையை போலவே வியாபார நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்களின் பலவீனங்களும் காரணமாக இருப்பதுடன் ஏதாவது ஒரு காரணத்தினால் ஒரு தடவை நுகர்வோரினால் தள்ளுபடி செய்யப்பட்டால் நிலவுகின்ற போட்டி சந்தையில் மீண்டும் அந்த நுகர்வோரை சந்தைக்கு பெற்றுக்கொள்ளல் கடினமாகும். அதன்படி புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அனேக வியாபார நிலையங்கள் மூலம் வெற்றிகரமான விற்பனை ஒன்றினை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த போதிலும் சில வியாபார நிலையங்கள் தோல்விகரமான நிலைமையினை அடைகின்றது. | |

**2.3 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் (HM) பொது முகாமையாளர், பிரதி பொது முகாமையாளர் (விற்பனவு), பிரதி பொது முகாமையாளர் (பொறியியல்) ஆகிய 3 பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அந்த சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தின் 3 பதவிகள் மற்றும் பிரதி பொது முகாமையாளர் (மனிதவள அபிவிருத்தி மற்றும் நிருவாகம்) உட்பட 4 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டது. சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் நீண்டகாலமாக காணப்படும் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்தினால் 2022 நவம்பர் 30 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022.12.31 திகதியில் உள்ளவாறு சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தின் 3 பதவிகள் மற்றும் பிரதி பொது முகாமையாளர் (மனிவளங்கள் மற்றும் நிருவாகம்) உட்பட 4 பதவிகளுக்காக நிதியமைச்சினால் வெளியிடப்பட்டிருந்த BD/CBP/01/01/04-2022 மற்றும் 2022.04.16 திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் ஆட்சேர்ப்புக்கள் இடை நிறுத்தப்பட்டுள்ளமையால் மேற்கூறிய பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு மீன்பிடித்துறை அமைச்சின் மூலம் முகாமைத்துவ சேவை | சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் நீண்ட காலமாக காணப்படும் வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | திணைக்களத்திற்கு 2022.11.04 திகதி அங்கீகாரத்திற்காக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முகாமைத்துவ மட்டத்தில் (MM) 11 பதவிகளுக்கான 20 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முகாமைத்துவ மட்டத்தின் 11 பதவிகளுக்கான 23 வெற்றிடங்கள் காணப்பட்டது. அந்த பதவிகளில் 4 பதவிகள் மாத்திரம் பதில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி கருமங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது. இந்த நிலைமை கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகைக்கு கடின தாக்கம் ஒன்றினை ஏற்படுத்தி இருந்தது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | 2020.12.31 திகதியில் உள்ளவாறு முகாமைத்துவ (MM1.1) வகுதியை சேர்ந்த வெற்றிடங்களின் விபரங்களின் படி நிருவாக முகாமையாளர், விற்பனை முகாமையாளர் ஆகிய பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளது.<br>உண்மையாக வெற்றிடங்கள் காணப்படும் பதவிகளுக்காக முறையான செய்முறை ஒன்று கடைபிடிக்கப்பட்டு பதில் கடமை பதவிகள் நிறுவுவதற்கு அல்லது புதிய ஆட்சேர்ப்புக்குரிய அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையினை கூட்டுத்தாபனத்திற்கு பொருத்தமாக்கிக் கொள்ளல் தொடர்பாக நேர்முகப் பரீட்சை சபையொன்று அமைச்சினால் பெயரிடப்பட்டு வெற்றிடப் பதவிகளுக்காக உள்ளகத்தின் மூலம் விண்ணப்பங்கள் அழைக்கப்பட்டு நேர்முகப் பரீட்சை நடாத்தி பதவிகளை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடப் பதவிகளை விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் DMS/16/18 இலக்கங் கொண்ட 2018 ஜூலை 16 திகதிய கடிதத்தின் 04 வது பிரிவின் படி நிறுவனத்தின் நிதி நிலைமைக்கு மற்றும் செயற்பாடுகளுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் விதத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மிகைத்து ஆட்சேர்ப்பு ஏதும் மேற்கொள்ளப்படக் கூடாது என இருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை மிகைத்து 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 08 பதவிகளுக்காக உத்தியோகத்தர் மற்றும் ஊழியர்கள் 99 பேரும் 2021 திசெம்பர் 31 | கூட்டுத்தாபனத்தினால் புதிய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டு இருக்காததுடன், 2019 ஆண்டில் 180 நாட்களை பூர்த்தி செய்யப்பட்ட ஊழியர்கள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிரந்தரப்படுத்தப்பட்டது.<br>ஆட்சேர்ப்பு நடைமுறையின் படி ஊழியர்கள் உள்வாங்குதல் மேற்கொள்ளப்படவில்லை.<br>ஆட்சேர்ப்பு நடைமுறையை கூட்டுத்தாபனத்திற்கு பொருத்தமாக்கிக் கொள்வதற்கு தேவையான தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை மிகைத்து ஆட்சேர்ப்பு ஏதும் மேற்கொள்ளப்பட கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | திகதி 06 பதவிகளுக்காக உத்தியோகத்தர் மற்றும் ஊழியர்கள் 78 பேர் சேர்க்கப்பட்டிருந்தது. | வருகின்றது. | |
| (ஈ) | இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் 09 பதவிகளுக்காக பதில் கடமையாற்றல் மேற்கொள்ளப்படுவதுடன் அந்த பதில் கடமையாற்றல் 1 வருடம் முதல் 5 வருடங்கள் வரை மேற்கொள்ளப்படும் எனவும் நியமனம் வழங்கி 5 வருடங்கள் வரை முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை எனவும் அதற்காக ரூபா 4,690,932 தொகை செலுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | பதில் கடமைப் பதவிகள் மேற்கொள்ளும் உத்தியோகத்தர்களுக்காக பதவிகளை நிறுவுதல் தொடர்பாக முறைப் பிரகாரம் நேர்முகப் பரீட்சை சபை ஒன்று அமைச்சு பிரதிநிதிகளினால் நியமனம் செய்யப்பட்டதுடன், விரைவாக அந்த பதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பதில் கடமை பதவிகளுக்காக விரைவாக நிரந்தரமாக ஊழியர்கள் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2019 ஆகஸ்ட் 22 திகதி முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறை அங்கீகரிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் வர்த்தக திட்டம் தயாரிக்கப்பட்டு இருக்காமையால் குறிப்பிட்ட பிரிவு மற்றும் நிறைவேற்றுகளுக்கு தேவைப்படும் எண்ணிக்கை பற்றி அங்கீகரித்து இருக்கவில்லை. இதன் படி பல்வேறு பிரிவுகள் மற்றும் 21 நிறைவேற்று 430 ஊழியர்கள் எதுவித அடிப்படையுமின்றி இணைக்கப்பட்டிருந்தனர். | பதில் அளிக்கப்படவில்லை. | பல்வேறு பிரிவுகள் மற்றும் நிறைவேற்றுக்காக இணைக்கப்பட வேண்டிய பதவியணி முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். |

**2.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 20 திகதி ரூபா 587,520 அண்மித்த பெறுமதியை உடைய மீன் இருப்பொன்று பயன்பாட்டிற்கு தகுதியற்றவை எனக் கணித்து குப்பைக்காக அகற்றப்பட்டிருந்தமையால் கூட்டுத்தாபனத்திற்கு நிதி நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக தொடர் நடவடிக்கை ஏதும் மேற்கொண்டு தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதில் அளிக்கப்படவில்லை. | கூட்டுத்தாபனத்திற்கு நிதிநட்டம் ஏற்படாதவாறு முகாமைத்துவம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | விற்பனவுகள் திருப்பி அனுப்பல் அல்லது அவ்வாறு திருப்பி அனுப்பல்களின் உச்சமட்டம் தொடர்பாகவும் திருப்பி அனுப்புவதற்கான காரணத்திற்கான தவறிற்கு பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு | பதில் அளிக்கப்படவில்லை. | விற்பனவுகள் திருப்பி அனுப்பல் தொடர்பாக உள்ளக சுற்றறிக்கை அறிவுரை முகாமைத்துவத்தினால் வெளியிட்டு திருப்பி |

| | | |
|---|---|---|
| திருப்பி அனுப்புதல்களை குறைப்பதற்காக முகாமைத்துவத்தினால் எதுவித உள்ளக சுற்றறிக்கையும் வெளியிட்டிருக்கவில்லை. காலி நிறைவேற்றில் 2020 ஆண்டில் ரூபா 14,635,446 தொகை பெறுமதியான 19,492 கிலோ மீன்கள் விற்பனையின் பின்னர் திருப்பி அனுப்பப்பட்டவை என ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இதற்கான தாக்கத்தை ஏற்படுத்திய காரணத்தை முகாமைத்துவத்தினால் தொடர்நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | அனுப்புதல்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3. வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆண்டிற்காக 14 தொழிற்பாடுகள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பின்வரும் 9 தொழிற்பாடுகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (i) மோதர பிரதான அலுவலகத்தில் சூரிய வலுச்சக்தி அலகொன்றுடன் குளிர் அறை தொகுதி நிர்மாணித்தல்.<br>(ii) 20 சிறப்பு வியாபார நிலையங்கள் நிர்மாணித்தல்<br>(iii) வியாபார வளங்களை திட்டமிடும் முறைமையொன்று அறிமுகப்படுத்தல்<br>(iv) துறைமுக வளவில் அதிகுளிரூட்டி கொள்கலன்கள் நிறுவுதல்.<br>(v) அனுராதபுரம் ஐஸ் இயந்திர அறையின் திருத்த வேலை மேற்கொள்ளல்.<br>(vi) 02 போக்லிப்ட் இயந்திரங்கள் கொள்வனவு செய்தல்.<br>(vii) மின்னேரியில் புதிய ஐஸ் இயந்திர அறையொன்று நிர்மாணித்தல்.<br>(viii) வட மாகாணத்தில் புதிய குளிரூட்டி தொகுதியொன்று நிர்மாணித்தல்.<br>(ix) மோதரையில் மீன் பதனிடும் அலகு ஒன்று நிர்மாணித்தல் | 2021 செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்காக பிரதானமாக ஏற்பாடுகள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டது தேசிய பாதீட்டின் மூலமாக இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திற்கு மீள் கட்டமைத்தல் மற்றும் செயற்பாட்டு செய்முறைகளை முறைப்படுத்துதல்களுக்காக ரூபா 500 மில்லியன் தொகை பண ஒதுக்கம் ஒன்று எனவாகும். அவ்வாறாயினும் தேசிய பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட தொகையில் இருந்து ஒரு தொகை ஏனும் அந்த ஆண்டின் போது கிடைக்கப் பெறாததுடன், பிரதான நிதி பாய்ச்சலாகிய மீன் விற்பனையின் மூலம் கிடைத்த பணத்தினால் நேரடியாக விற்பனையை அபிவிருத்தி செய்வதற்காக ஓரளவு புதிய வர்த்தக நிலையங்கள் ஆரம்பிப்பதை தவிர ஏனைய கருமங்கள் மேற்கொள்ள முடியாமல் இருந்தது. | செயல் நடவடிக்கை திட்டத்தின் படி முன்னேற்றம் ஒன்றினை பெற்றுக் கொள்ள வேண்டும். |

**3.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சிலாபம் நிறைவேற்றில் கடமையாற்றிய ஊழியர் ஒருவருக்கு எதிராக ரூபா 1,594,067 தொகையொன்று மோசடி செய்தல் மற்றும் பேலியகொட மீன்விற்பனை நிலையத்தில் மெட்ரோ நிறைவேற்றில் ஊழியர் ஒருவருக்கு எதிராக ரூபா 619,815 இற்கான மீன்கள் மீன்பணம் மோசடி செய்தல் தொடர்பாக கூட்டுத்தாபனத்தினால் நபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் ஊழியர்களுக்கு இவ்வாறு கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான பணம் மோசடி செய்ய முடியாதவாறு உள்ளகக் கணக்காய்வு ஒன்று கூட்டுத்தாபனத்தினால் செயற்படுத்தி இருக்கவில்லை என மேலும் அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த கடன் மீதிகள் ஏற்படல் மற்றும் அறவீடு செய்தல் தொடர்பாக காணப்படும் பழைய செய்முறைகளின் பலவீனங்கள் காணப்படுகின்றன என ஏற்றுக் கொள்வதுடன் தற்போது உயர் முகாமைத்துவத்தினால் நேர் மேற்பார்வையின் கீழ் கடன் அறவீடு செய்யும் பிரிவு வலுப்படுத்தப்பட்டு வாராந்தம் அதன் முன்னேற்றம் ஒழுங்குறுத்தப்படுவதுடன் ஆரம்ப பெறுகை அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள கணினி கணக்கீட்டு முறைமை கூடிய விரைவில் நிறுவுவதன் மூலம் இந்த பலவீனங்கள் தொடர்பாக நியாயமான முன்னேற்றம் ஒன்றினை பெற்றுக் கொள்ள முடியும் என குறிப்பிடுகின்றேன். | வலுவான உள்ளகக் கட்டுப்பாடு முறைமை மற்றும் கட்டுப்பாட்டு செய்முறை ஒன்று தயாரித்து மோசடிகள் மற்றும் குற்றங்களை குறைப்பதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவத்தினால் செயற்பட வேண்டும். |